செய்தி வெளியீட்டு எண்.344 நாள்: 4.7.2009

# <u>தமிழகப் பள்ளிகளில்</u>
# <u>பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாள் விழாவை</u>
# <u>'கல்வி வளர்ச்சி நாள்' எனக் கொண்டாடிட</u>
# <u>1 கோடியே 33 இலட்ச ரூபாய் அனுமதி !</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை !</u>

திராவிட முன்னேற்றக் கழக அரசு 2006இல் பொறுப்பேற்றதும் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிய சிறப்பான தொண்டுகளைப் போற்றும்வகையில், அவருடைய பிறந்த நாளான ஜூலை திங்கள் 15ஆம் நாளைக் 'கல்வி வளர்ச்சி நாள்' என அறிவித்து, ஆண்டுதோறும் அந்நாளில் தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ மாணவியர் புத்தாடை அணிந்து, விழா எடுத்து, காமராசர் அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து, மகிழ்ச்சியுடன் கொண்டாடிட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 24.5.2006 அன்று ஆணையிட்டார்கள்.

அந்த ஆணையைத் தொடர்ந்து, கடந்த மூன்றாண்டுகளாகத் தமிழகத்தில் உள்ள பள்ளிகள் அனைத்திலும் பெந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாள் விழா 'கல்வி வளர்ச்சி நாள்' என மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டுள்ளது. அதேபோல, இந்த ஆண்டின் ஜூலை திங்கள் 15ஆம் நாளன்றும் மாணவ மாணவியரிடையே பல்வேறு போட்டிகளையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்திப் பரிசுகள் வழங்கி, ஊக்கமளித்துப் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் புகழ்பாடும் வகையில் தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 'கல்வி வளர்ச்சி நாள் விழா' எழுச்சியுடன் கொண்டாடப்பட வேண்டுமென்பதற்காக அரசு நிதி ஒதுக்கீடாக 1 கோடியே 8 இலட்சத்து 62 ஆயிரத்து 550 ரூபாயும், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து 24 இலட்சத்து 58 ஆயிரத்து 200 ரூபாயும் ஆக மொத்தம் 1 கோடியே 33 இலட்சத்து 20 ஆயிரத்து 750 ரூபாய் அனுமதித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.